

# பனிமயம்

நவம்பர் 2023



ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

பனிமயத் தாயின் 16ஆவது பொற்தேர்ப் பெருவிழாவோடு தொடர்புடைய இரண்டு நிகழ்வுகள் கடந்த மாதம் நிறைவேறின. கடந்த ஆண்டு 08.10.2022 இரண்டாம் சனி இரவில் ***முழு இரவு தொடர் செபமாலை*** நடைபெற்று, மறுநாள் முற்பகலில் தங்கத் தேர் பேராலய வளாகத்துக்குக் கொண்டுவரப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கும்.

அதுபோலவே, கடந்த 14.10.2023 இரண்டாம் சனி இரவில் 10.00 மணி முதல் அதிகாலை 05.00 மணி வரை ***முழு இரவு தொடர் செபமாலை*** நடைபெற்றது. வழக்கமான கருத்துகளோடு, இந்த ஆண்டு தங்கத் தேர் ஆசிகளுக்கு நன்றியாகவும் இந்தத் தொடர் செபமாலை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மறுநாள் (15.10.2023 ஞாயிறு) காலை 11.00 மணிக்கு நன்றி செபத்தோடு, புதிதாகக் கட்டப்பட்டு, அர்ச்சிக்கப்பட்ட "தேர் மாறன் தேர்ப்பறை" நோக்கி தங்கத் தேர் உற்சாகமாக இழுக்கப்பட்டு, புதிய பறையில் கொண்டு சேர்க்கப்பட்டது.

இவ்விரு நிகழ்வுகளிலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். பேராலய வளாகமே விழாக் கோலம் பூண்டது என்று சொன்னால் மிகையல்ல. இவ்வாறு, கடந்த 2022 அக்டோபரில் தொடங்கிய தங்கத் தேரின் ஓராண்டு பயணம் இந்த அக்டோபரில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

முதலில், "நம்பிக்கையைத் ***தொடங்கி வழி*** நடத்துபவரும் அதை ***நிறைவு செய்பவருமான*** இயேசுவின்மீது கண்களைப் பதிய வைப்போம்" (எபி 12:2) என்ற இறைமொழியின்படி தங்கத் தேர்த் திருப்பணிகளைத் தொடங்கி, வழி நடத்தி, அதனை நிறைவு செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றியும், புகழ்ச்சியும் செலுத்துகிறேன்.

இரண்டாவதாக, "ஆர்வத்தோடு ***தொடங்கியது போலவே*** உங்கள் நிலைக்கு ஏற்றவாறு கொடுத்து, ஆர்வத்தோடு அதனைச் ***செய்து முடித்த***" (2 கொரி 8:11) பனிமயத் தாயின் பிள்ளைகள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 24 தாரகை 3

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### திருத்தந்தைக்காக...

திருத்தந்தை தமது பணியை நிறைவேற்றுகையில், தூய ஆவியாரின் உதவியோடு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையுடன் உடனிருக்கும் படி நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

## தங்கத்தேர்ச் சிறப்பிதழ் 6

1. திருவழிபாட்டில் அன்னை மரியா . . . . . . . . . . 4
அருள்பணி. முனைவர் ரோலிங்டன்

2. 'ஞானத்தின் பெட்டகம்' - மரியா . . . . . . . . . . . 6
இம்மாகுலேட் பிலிப்

3. மாதாவின் மகத்துவம் . . . . . . . . . . . . . . . . . 9
சி. பிரபாவதி

4. மரியன்னையின் முன்னோடிகள் . . . . . . . . . 10
அருள்பணி. குமார்ராஜா

5. மனிதனின் உன்னத நிலை . . . . . . . . . . . . . 12
கலாபன் வாஸ்

6. நம் தாய் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14
இஞ்ஞாசி ஜெயசீலி

7. பனிமய சாட்சியங்கள் . . . . . . . . . . . . . . . . 15

8. தங்கத்தேர்க் மைல் கற்கள் . . . . . . . . . . . . . . 16

9. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . 18

10. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . 21

11. மாதம் ஒரு மாதா படம் . . . . . . . . . . . . . . . 25

# திருவழிபாட்டில் அன்னை மரியா



அன்னை மரியாவுக்குத் திருவழிபாட்டில் மிகச் சிறப்பான இடம் உண்டு. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன: மரியா கடவுளின் தாய்; கடவுளுடைய படைப்புகளில் தலைசிறந்த படைப்பு; படைப்பிற்கெல்லாம் சிகரம்; கடவுளால் தேர்ந்துகொள்ளப்பெற்ற மகள்/பெண், பெண்களுக்குள் பேறுபெற்றவர்;

எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவின் அர்ப்பணிப்புள்ள தாய்; எனவேதான் அவர் திருஅவைக்கும் தாய்; நம்பிக்கையாளரின் மாதிரி, மனிதர்களில் எல்லாம் மேலானவர். இதன் காரணமாக நாம் இவருக்கு மற்றப் புனிதர்களைக் காட்டிலும் மேலான வணக்கம் (hyperdulia) செலுத்த வேண்டும் என்கிறது நமது தாய்த்திருஅவை.

மரியாவின் வணக்கம் கிறிஸ்துவிடமிருந்தே தொடங்கி, கிறிஸ்துவிலே நிறைவு கண்டு, கிறிஸ்து வழியாக தூய ஆவியாரில் கடவுளிடம் நம்மை அழைத்துச் செல்கிறது. இத்தகைய மேலான வணக்கம் கொண்டிருக்கின்ற அன்னை மரியா திருவழிபாட்டில் கொண்டிருக்கின்ற சிறப்பிடத்தை இக்கட்டுரையின் வழியாக நாம் அறிய வருகிறோம்.

### இறைவனின் மீட்புத் திட்டத்தில் மரியா

மரியா திருவழிபாட்டில் மிகச் சிறப்பான இடம் பெறுவதற்கு முக்கிய காரணம் என்னவெனில், அவர் முதன்முதலில் இறைவனின் மீட்புத் திட்டத்தில் இடம் பெற்றதுதான். முன் குறித்த அவரைக் கடவுள் தம் ஒரே மகனின் அன்னையாகத் திகழத் தேர்ந்;தெடுத்து, தமது மாட்சியில் பங்குபெறச் செய்துள்ளார். (காண்க. உரோ 8:29-30).

மரியாவும் கடவுளின் திட்டத்தை **'அவரது அடிமை'**யாக (லூக் 1:38) இறுதிவரை நிலைத்துநின்று நிறைவேற்றினார். தம் மகனின் சிலுவை அடியில் மட்டும் அல்ல, அந்த மீட்புத் திட்டம் தொடர்ந்து செயல்பட, தம் மகனின் உயிர்தெழுதலுக்குப்பின் திருத்தூதர்களோடு இறை வேண்டலில் ஈடுபட்டது மீட்புப் பணிக்கு அவர் மீண்டும் மணி அடிப்பதுபோல் ஆகிவிட்டது.

தம் மகன் கிறிஸ்துவுடனும், அவரது சீடர்களுடனும் அவர் வாழ்ந்த நம்பிக்கை வாழ்வும் அன்பு வாழ்வும் சான்று வாழ்வும்தான் தொடக்கக் காலத்திலிருந்தே அன்னை மரியாவைக் கிறிஸ்தவ மக்கள் நினைவுகூரச் செய்து, அவர்மேல் தங்கள் அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு பல விழாக்கள் எடுக்கச் செய்தன.

### திருவழிபாட்டில் மரியன்னைக்குச் சிறப்பிடம்

மீட்புத் திட்டத்தில் மரியன்னைக்கு உரிய சிறப்பிடம்தான் திருவழிபாட்டில் அவருக்கு உரிய இடத்திற்கு அடித்தளம். எனவே திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் மரியாவை நினைந்து, புகழ்ந்து அவரை வணங்க திருஅவையும், ஏன் நாம் அனைவருமே சொந்தம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அவர் வழியாகவும் நாம் கடவுளைப் புகழ்கிறோம், போற்றுகிறோம், நன்றி செலுத்துகிறோம்.

நம் மன்றாட்டுகள் அவரின் வேண்டுதலாலும் கேட்கப்படுகின்றன என்பது கத்தோலிக்க நம்பிக்கை. இதற்கு சில வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன: தொடக்கக் காலத்தில் கிறிஸ்தவர்கள் வானதூதர், எலிசபெத் இவர்களின் வாழ்த்துரைகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். 4-ஆம் நூற்றாண்டிலே, "கடவுளுடைய புனித அன்னையே, உமது அடைக்கலமாக ஓடி வந்துள்ளோம்" என்ற இறைவேண்டலையும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

காலப்போக்கில் மரியாவின் விழாக்கள் நான்கு மூலக் கூறுகளின் அடிப்படையில் எழுந்துள்ளன:

1) கிறிஸ்துவின் பிறப்பின் அடிப்படையில் - மரியாவின் தாய்மை, இயேசுவின் பிறப்புச் செய்தி அறிவிக்கப்படல், இயேசு காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்படல்;

2) எருசலேம் பேராலயம் நேர்ந்தளிக்கப் படுவதின் அடிப்படையில் - மரியாவின் பிறப்பு, மரியாவின் அர்ப்பணிப்பு, மரியாவின் விண்ணேற்பு;

3) நற்செய்தியின்மீது உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் - அமல உற்பவம், மரியா - எலிசபெத்து சந்திப்பு, துயரங்கள்;

4) பக்தி முயற்சிகளின் அடிப்படையில் - மரியா அரசி, மாசற்ற இதயம், செபமாலை;

5) இடங்களின் அடிப்படையில் - லூர்து, கார்மெல், பனிமயம், குவதாலுபே

இத்தகையக் கொண்டாட்டங்களைப் பார்க்கின்றபொழுது மரியாவின் விழாக்கள் ஐந்து நிலைகளில் திருவழிபாட்டில் இடம் பெறுகின்றன; பெருவிழாக்கள், விழாக்கள், கட்டாய நினைவுகள், விருப்ப நினைவுகள், நேர்ச்சித் திருப்பலிகள் ஆகியன. இதன் வழியாக, அதாவது அன்னையின் விழாக்களைக் கொண்டாடுகின்ற பொழுது கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் தான் பங்கு கொள்கிறோம் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இறுதியாக, இறைவனின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியா இடம் பெற்றதால், திருவழிபாட்டின் ஒவ்வொரு கூறிலும் அவர் சிறப்பிடம் பெற்றிருக்கிறார். திருவழிபாட்டில் இடம் பெற்றுள்ள அன்னை மரியா நம் இதயத்திலும் இடம் பெற்றிருக்கிறார் என்பது இன்னும் உயர்ந்த நிலையே.

எனவே அன்னை மரியாவை நாம் புகழ்ந்து, அவருக்கு வணக்கம் செலுத்துவோம். மூவொரு கடவுளின் மீட்புத் திட்டத்தை வெளிப்படுத்திய அவருக்கு நாம் வணக்கம் செலுத்துவதால், அந்த மூவொரு கடவுளையே நாம் மாட்சிப் படுத்துகிறோம் என்பதை உள்ளத்தில் கொள்வோம்.

அது மட்டும் அல்லாமல், **"எனது உள்ளம் ஆண்டவரைப் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது"** (லூக். 1:47) என்று அவரோடு இணைந்து நாமும் திருவழிபாட்டில் கடவுளைப் புகழ்வோம். கடவுளின் அன்னையான மரியா ஒவ்வொரு திருவழிபாட்டுக் கொண்டாட்டத்திலும் நமக்கு மாதிரியாக, பரிந்து பேசுபவராக, அன்னையாகத் திகழ்வதால் அவரை நோக்கிய இறைபற்றுதலை மேன்மேலும் வளர்த்துக் கொள்வோம்.



அருள்பணி. முனைவர் ரோலிங்டன்

# "ஞானத்தின் பெட்டகம்" - மரியா



யோசேப்பிற்கு மண ஒப்பந்தமான நங்கையாக மரியா அறிமுகமாகிறார். இந்த இளநங்கை எப்படி ஞானத்தின் பெட்டகமாக விளங்கினார் என்பதை தியானிப்போம்.

**1) இருமுறை ஞானத்தால் நிரம்பப்பெற்றவர்**

தூய ஆவியின் வரங்களிலும் (எசாயா 11:2) கொடைகளிலும் (1 கொரி 12:8) இடம் பெறும் ஞானத்தால் நிரம்பியவர் அன்னை மரியா. முதல் முறை, "தூயஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உன்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" '(லூக் 1:35)

இரண்டாம் முறை "அவர்கள் அனைவரும்... அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்... அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்" (திப 1:14; 2: 1, 4) . இவ்வாறு இயேசு பிறப்பிற்கு முன்பும் விண்ணேற்பிற்கு பின்பும் தூயஆவியால் நிரம்பப் பெற்றவர் அன்னை மரியாதான்.

**2) கன்னி கருவுற்று ஒரு மகனைப் பெற்றார் (லூக் 1:26-38)**

"கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்" என்று கபிரியேல் தூதர் சொன்னபோது "நான் கன்னி ஆயிற்றே" என்றார் மரியா. எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்தபடி, "இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்." (எசா 7:14) 'கன்னி' என்பது எபிரேயப் பாடம் என்று அடிக்குறிப்பில் உள்ளது. 'இறைவன் நம்மோடு உள்ளார்' என்று பொருள்படும் 'இம்மானுவேல்' என்னும் பெயரைக் கொண்டிருப்பார் என்று இறைவாக்கினர் முன்னறிவித்ததை மத்தேயு நற்செய்தியில் வாசிக்கிறோம். (மத் 1:18-25)

### 3) மரியா ஏழைத்தாய்

பாவக்கழுவாய்க்கான காணிக்கை கொண்டு வருவதைப் பற்றி சொல்லும்போது “அவர் தம் குற்றப்பழியை அகற்ற ஆட்டுக்குட்டி கொண்டு வர இயலாது இருந்தால் இரு காட்டுப் புறாக்களையோ இரு புறாக்குஞ்சுகளையோ கொண்டு வந்து ஒன்றைப் பாவம் போக்கும் பலியாகவும், மற்றொன்றை எரிபலியாகவும் ஆண்டவருக்குச் செலுத்த அவற்றைக் குருவிடம் கொண்டு வரவேண்டும்.” (லேவி 5:7, 8(அ); 12:8) மரியா இயேசுவுக்கு ‘இரு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது.’ (லூக் 2:24) என்றுள்ளது.

லேவியராகமத்தில் சொல்லியுள்ளபடி மரியாவால் தனது ‘உலகத்தின் பாவம் போக்கும் ஆட்டுக்குட்டியானவருக்காகக்’ (யோவா 1:29, 36) காணிக்கையாகக் கொடுக்க ஓர் ஆட்டுக் குட்டியைக்கூட கொண்டு வர இயலாதிருந்தது அவரது ஏழ்மை நிலையை விளக்குகிறது. மேலும் மகன் இறந்தபோது அடக்கம்செய்ய ஒரு கல்லறைகூட இல்லை. மேலும் வெள்ளைப் போளம், சந்தனத்தூள் வைத்து அடக்கம் பண்ண உதவியதும் நிக்கதேம்தான். (யோவா 19:38-42) மரியாவிற்கு எத்தனை வேதனைக்குரிய நிலை பாருங்கள்.

### 4) ஏழே முறை மட்டுமே பேசினாலும் நிறைய கற்றுதந்தவர் நம் அன்னை மரியா

மரியா பேசியவைகளையும் - அதன் படிப்பினைகளையும் பார்ப்போம்.

1. ‘இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!’ (லூக் 1:34) - **தெளிவு பெறுதல்**
2. ‘நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்’. (லூக் 1:38) - **அர்ப்பணித்தல்**
3. மரியா, செக்கரியா வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. (லூக் 1:40-41) - **பாராட்டுதல், தன்னலம் கருதாமல் பிறரின் தேவையில் உதவுதல்.**
4. மரியாவின் பாடல் (லூக் 1:48-55) - **கடவுளைப் புகழ்ந்து பாடுதல்.**
5. மகனே ,ஏன் இப்படி செய்தாய்? (லூக் 2:48) - **குழந்தையைக் கனிவோடு திருத்துதல்.**
6. திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது. (யோவா 2:3) - **பிறரின் தேவை அறிந்து உதவ முன்வருதல்.**
7. அவர் உங்களுக்குச் சொன்னதெல்லாம் செய்யுங்கள் (யோவா 2:5) - **நமக்கு வழிகாட்டுதல்.**

### 5) நேரம் வருமுன் மகனைப் பணிக்கு அனுப்பிய அன்னை

இயேசு தமது ஆரம்ப நாளை அன்னை மரியாவோடு செலவழித்தார். இயேசுவும் மரியாவும் கானாவில் திருமணத்திற்கு அழைக்கப் பெற்றிருந்தனர். இரசம் தீர்ந்த நிலையில் மகன் அவரை விட்டுப் பிரியும் நேரம் வராதிருந்தும் புதுமை செய்யச் சொல்லி பொதுப் பணிக்கு அனுப்பி வைக்கிறார் மரியா. (யோவா 2:1-11) ஆனால் பிறகு அவரைத் தேடித் தேடிச் சென்றதைப் பார்க்க முடிகிறது. (மத் 12::46; மாற் 3:31; லூக் 8:19) அப்போது நாமும் இறைவனின் வார்த்தையின்படி நடப்பதன் மூலமும் திருவுளத்தை நிறைவேற்றுவதன் மூலமும் எப்படி இயேசுவின் தாயும் சகோதரியும் ஆக முடியும் என்பதை இயேசு நமக்குக் கற்றுத்தருகிறார். (மத் 12:50; மாற் 3:34; லூக் 8:21)

### 6) அன்னை மரியாவின் ஏழு வியாகுலங்கள்

1. **சிமியோனின் இறைவாக்கு:** ‘உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப்பாயும்’ (லூக் 2:35) இது மிகப் பெரிய வேதனை

எட்டு நாள் குழந்தை 'எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும்’ என்று அதன்



தாயிடம் மட்டும் சொன்னால் எவ்வளவு வேதனை இருந்திருக்கும். அத்துன்பத்தின்போது மகனின் சிலுவைப்பாடுகளையும் சாவையும் குறித்துக் கூறினார் சிமியோன். அவர் தாயிடம் மட்டுமே சொன்னதால், அத்துன்ப வேளையில் கணவன் உடனிருக்க மாட்டார் எனும் எண்ணம் எத்தகைய வேதனை தந்திருக்கும். உண்மையிலே மிகக் கொடுமையான வியாகுலம் இது.

2. **எகிப்துக்குத் தப்பி ஓடுதல்:** தூதர் எச்சரித்ததனால் யோசேப்புக்குக் கீழ்ப்படிந்து மரியா குழந்தையோடு எகிப்துக்கு தப்பி ஓடினார் (மத் 2:13-15).

3. பன்னிரண்டு வயதில் இயேசுவைக் காணாமல் மூன்று நாட்கள் தேடி அலைந்தது (லூக் 2:41-51).

4. சிலுவையின் பாதையில் மகனைச் சந்தித்த போது ஏற்பட்ட வியாகுலம். (சிலுவை அடிவரை பின்தொடர்ந்த மரியா - யோவா 19:25).

5. இயேசு இறந்த போது சிலுவை மரத்தின் அடியில் நின்றதைப் போன்ற வேதனை வேறில்லை (யோவா 19:26-30) .

6. **இயேசுவின் திருவுடலை மடியில் தாங்கிய வியாகுலம் (லூக் 2:37).** வாள் ஊடுருவிய அனுபவம் அது.

7. தான் சுமந்து பெற்ற ஒரே மகன் இயேசுவின் உடலை இரவல் கல்லறையில் அடக்கம் செய்த போது எப்படி துவண்டு போயிருப்பார் அன்னை மரியா. (யோவா 19:41-42) .

### 7) வார்த்தையின் வழியில் நாம் எப்படி நடப்பது?

நாம் எப்படி இறை வார்த்தையை இதயத்தில் வைத்து தியானிக்க வேண்டுமென்றும் மரியா நமக்குக் கற்றுத்தருகிறார்

1. மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார். (லூக் 2:19)

2 அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். (லூக் 2:51) நாமும் இறை வார்த்தையை இதயத்தில் இருத்தி தியானித்து வாழ்வோம் . ஏனெனில் 'என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே' (திபா119:105)

மரியா வாழ்ந்து காட்டிச் சென்ற இறை வார்த்தையின் பாதையில் நாமும் செல்வோம். நிலை வாழ்வை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்வோம்.



இம்மாகுலேட் பிலிப்

(உண்மைச் சம்பவத்தின் தழுவல் கதை)

# மாதாவின் மகத்துவம்



விக்ரமிற்கு அன்று முழுவதும் ஒரே மனஉளைச்சல். வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. சராங் பதவியில் கப்பலில் வேலை செய்பவர் அவர். இஞ்சின் ரூமில் வேலைசெய்யும் பத்து பேர் கொண்டகுழுவின் தலைவர்.

'ஏன் தல இன்னக்கி ரொம்ப டென்ஷனா இருக்கீங்க?' என்றான் அந்தோணி. 'வீட்ல மனைவிக்குப் பிரசவ நாள் முடிஞ்சிடுத்து. ஆனா இன்னும் ஒருதகவலும் இல்ல. அதான் கொஞ்சம் பயமாயிருக்கப்பா' என்றார்.

ஏற்கனவே இரண்டு பெண்குழந்தைகள் உள்ள நிலையில் மூன்றாவதாக ஆண்மகனை எதிர்நோக்கி இருந்தனர் அந்த தம்பதியினர். மற்ற நாட்களில் கடிதப் போக்குவரத்து மட்டுமே. ஆனால் அவசரங்களுக்கு தந்தி அனுப்புவார்கள். கம்பெனிக்கு அனுப்பப்பட்டு பிறகு, கப்பலுக்கு அனுப்பப்படும்.

மறுநாள் நேராக கேப்டனின் அறைக்குச் சென்று தனது நிலையைக் கூறி விடுமுறை கேட்டார். 'சார் என் மனைவிக்கு யாருடைய உதவியும் இல்லை. பிரசவ நாள் வேறு ஆகிவிட்டது. என்ன நடந்ததோ தெரியவில்லை. என்னை எப்படியாவது ஊருக்கு அனுப்பிவிடுங்கள்' என கெஞ்சினார்.

கேப்டன் மிகவும் கறார்பேர்வழி. 'உனக்குப் பதிலாள் இங்கு வந்தால்தான் நீ போகமுடியும்' எனக் கூறிவிட்டார்.

மிகுந்த வேதனையோடு தன் அறைக்குச் சென்ற விக்ரமிற்கு உறக்கம் வரவில்லை. சரி, நம்ம 'பனிமய மாதாவிடம் வேண்டுவோம் என்று தனக்குள் கூறிக்கொண்டே செபமாலை செபித்தார். அப்படியே கண்ணயர்ந்து விட்டார். கனவில் பனிமய மாதா தோன்றி, 'கவலைப்படாதே மகனே' என்று கூறவும் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. இதுவும் ஒருமனப்பிரமை தான் என எண்ணும்போது, மீண்டும் பலமாகத் தட்டப்பட்டது. திறந்தால் வாசலில் ஒருபணியாள், 'சராங் சார் உங்களை கேப்டன் கூப்பிடுறாரு' என்றார். 'உனக்குப் பதிலாள் இன்று வருகிறார். நீ நாளை ஊருக்குக் கிளம்பலாம்' என்று கேப்டன் கூறியவுடன; மிகுந்த மகிழ்வுடன் கிளம்பத் தயாரானார்.

நவம்பர் மாத விடியற்காலையில் கதவு தட்டப்பட்டது. நிறைமாத கர்ப்பிணியான சுசிலாவிற்கு கதவைத் திறந்ததும் இன்ப அதிர்ச்சி. 'என்னங்க இப்படி சொல்லாம கொள்ளாம வந்திருக்கீங்க!. எப்படியும் தந்தி அடிச்சிட்டுத்தான வருவீங்க?' என்றவளின் முகத்தில் ஆயிரம்வாட்ஸ் பல்பு மின்விளக்கின் வெளிச்சம் படர்ந்தது.

'இல்ல, டெலிவரி தேதி முடிந்து ஏறக்குறைய ஒருமாசம் ஆகுதே... அதான்புள்ள ஒரே கவலையாப் போச்சி'

அடுத்த நாளே மூன்றாவதாக மகள் பிறந்தாள். சுகப் பிரசவம்தான். ஆனாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சுசிலா. 'போ! இதுவும் பொண்ணா?' என வந்திருந்தவர்களின் வசைமொழி வேறு வாட்டிவதைத்தது.

குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் செய்தித் தாளைப் படித்த விக்ரம் அப்படியே நிலைகுலைந்து போனார். 'என்னங்க!' என மனைவி அழைத்தவுடன் 'ஓ'வென அழுது மனைவியிடம் அந்த செய்தித் தாளைக் காட்டினார்.

வங்கப் பெருங்கடலில் தாண்டவமாடிய புயலைப் பற்றிய புகைப்படங்கள் அதில் இருந்தன. இச்செய்தித் தாளின் தலைப்புச் செய்தயைப் பார்த்தவுடன் மயக்கமே வந்துவிட்டது. அதில் ஒருவர்கூட உயிர் தப்பவில்லை.

செய்தி அறிந்த நண்பர்கள் உறவினர்களில் சிலர் வீட்டிற்கு துக்கம் விசாரிக்க வந்துவிட்டனர். பிறகுதான் விக்ரம் உயிரோடு இருப்பதைப் பார்த்து பெருமூச்சு விட்டனர்.

தான் உயிர்பிழைத்தது இந்த பனிமயத் தாயினால்தான் என உணர்ந்தவராய் நன்றியோடு மாதாவைக் காண ஆலயம் விரைந்தார் அவர்.



சி.பிரபாவதி

*மரியன்னையின் முன்னோடிகள்: 4*

# யாக்கோபின் மனைவி ராகேல்!



அன்னை மரியாவின் முன்னோடிகளாகப் பழைய ஏற்பாட்டில் தோன்றும் மகளிரில் யாக்கோபின் மனைவியான ராகேலும் ஒருவர். இவரைப் பற்றிய செய்திகளைத் தொடக்க நூல் 29ஆம் அதிகாரம் முதல் 35 வரையில் காணலாம். யாக்கோபின் சிறப்பான பாசத்துக்குரிய பிள்ளைகளான **யோசேப்பு, பெஞ்சமின்** இருவரின் தாய் இவரே.

தொடக்க நூலுக்கு வெளியே மூன்று இடங்களில் ராகேலின் பெயர் சொல்லப் பட்டிருக்கிறது. ரூத்து நூலில் ரூத்தின் மாமியாரான நவோமியை வாழ்த்தும் நகரப் பெரியவர்கள் "இஸ்ரயேலின் குடும்பம் பெருகச் செய்த **ராகேல், லேயாள்** இருவரைப் போல உமது இல்லம் புகுந்திடும் இந்தப் பெண்ணும் இருக்கும் வண்ணம் ஆண்டவர் அருள்க" (ரூத் 4:11) என்று ரூத்தைப் பற்றிப் பெருமையாகச் சொல்கிறார்கள்.

இந்த வாழ்த்து நமக்கு இரட்டிப்பு வியப்பைத் தருகிறது. முதலில் இஸ்ரயேலின் (யாக்கோபின்) குடும்பத்தைப் பெருகச் செய்து, அதன் வழியாக இஸ்ரயேல் என்னும் மாபெரும் இனத்திற்கே தாயான பெருமையை ராகேலுக்கும், லேயாளுக்கும் இந்த வாழ்த்து வழங்குகிறது. இரண்டாவதாக, மூத்தவரான லேயாளை விட்டுவிட்டு, இளையவரான ராகேலையே இந்த வாழ்த்து முதன்மைப்படுத்துகிறது.

அடுத்து, எரேமியா இறைவாக்கினரின் நூலில் "ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்; இராமாவிலே ஒரு குரல் கேட்கின்றது; ஒரே புலம்பலும் அழுகையுமாய் இருக்கின்றது. **இராகேல்** தம் குழந்தைகளுக்காக அழுதுகொண்டிருக்கின்றார்; ஆறுதல் பெற அவர் மறுக்கின்றார்; ஏனெனில், அவருடைய குழந்தைகள் அவரோடு இல்லை" (எரே 31:15) என்னும் இறைவாக்கு நூலில் ராகேலின் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. ராகேல் பெஞ்சமினைப் பெற்றெடுக்கும்போது பேறுகால வேதனையில் துடித்தார். மகன் பிறந்ததும் அவனுக்குப் பென்ஓனி ("வேதனையின் மகன்") என்று பெயரிட்டுவிட்டு இறந்துவிட்டார். இதுவே இந்த இறைவாக்கின் பின்னணி. ஆனால், வேறொரு செய்தியையும் இந்த இறைவாக்கு தன்னுள் கொண்டிருக்கிறது.

கி.மு. 722ஆம் ஆண்டில் அசீரியர்கள் யூதர்களை சிறைபிடித்து, நாடு கடத்தியபோது, இந்த நிகழ்வை நினைவுபடுத்தி, தம் பிள்ளைகளுக்காக அழுது புலம்பும் தாயாக இஸ்ரயேலை உருவகப்படுத்தி இறைவாக்காக

முன்னுரைத்தார் எரேமியா. இங்கே ராகேல் இஸ்ரயேல் இனத்தின் தாயாகக் காட்டப்படுகிறார்.

புதிய ஏற்பாட்டின் நற்செய்தியாளரான மத்தேயுவோ, பெத்லகேமில் இயேசு பிறந்தபோது, அவர் பொருட்டு ஏரோதால் கொல்லப்பட்ட மாசற்ற குழந்தைகளை இந்நிகழ்வுடன் ஒப்பிட்டு (மத் 2:17) எரேமியாவின் இறைவாக்கு நிறைவேறியதாகச் சொல்கிறார்.

இப்போது எப்படியெல்லாம் ராகேல் பின்வரும் வழிகளில் அன்னை மரியாவின் முன்னோடியாகத் திகழ்கிறார் என்று பட்டியலிடுவோம்.

1. ராகேல் குழந்தைப் பேறு இல்லாமல் வேதனையுற்று, கடவுளிடம் மன்றாடி, பிள்ளைச் செல்வத்தைப் பெற்றுக்கொண்டார். "கடவுள் ராகேலை **நினைவுகூர்ந்தார்**. அவர் அவருக்குச் செவிசாய்த்துத் தாய்மைப்பேறு அருளினார்" (தொநூ 30:22) என்பது ராகேலைப் பெருமைப் படுத்தும் புகழ்பெற்ற பழைய ஏற்பாட்டு இறைமொழி. மரியாவோ கணவனை அறியாத கன்னியாக இருந்தார். கடவுள் அவரது "தாழ்நிலையைக் கண்ணோக்கினார்" (லூக் 1:48). இயேசுவைக் கருத்தரிக்கும் பேற்றினைத் தந்து, எல்லாத் தலைமுறைகளும் பேறுடையாள் எனப் போற்றச் செய்தார்.

2. யாக்கோபு ராகேலின்மீது கொண்டிருந்த அன்பை மிகவும் அழகாகச் சொல்கிறது இந்த இறைமொழி. "யாக்கோபு ஏழாண்டுகள் ராகேலை முன்னிட்டு வேலை செய்தார். ஆனால் அவர் அவள்மீது வைத்திருந்த **அன்பின் மிகுதியால்** அது அவருக்குச் சில நாட்களாகவே தோன்றியது" (தொநூ 29:20). அன்னை மரியாவின் கணவரான யோசேப்புக்கும் இது பொருந்தும். மரியாமீதும், குழந்தை இயேசுவின்மீதும் கொண்டிருந்த அன்பின் மிகுதியால் எகிப்துக்குத் தப்பிச் செல்லுதல் போன்ற நெருக்கடிகள் யோசேப்புக்குச் சிறியதாகவே தோன்றின.

3. "ஆடு மேய்ப்பவளான ராகேல் தன் தந்தையின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள்" (தொநூ 29:9) என்பது மரியாவுக்கும் பொருந்தும். நல்ல ஆயனான இயேசுவின் தாயான மரியா தம் மகனோடு இணைந்து புதிய இஸ்ரயேலாம் ஆடுகளை மேய்த்துப் பராமரிப்பவராக இருக்கின்றார்.

4. லாபானின் மூத்த மகளான "லேயா மங்கிய பார்வை உடையவள். ராகேலோ வடிவழகும் எழில் தோற்றமும் உள்ளவள்" (தொநூ 29:17). மரியாவோ அக அழகு மிக்கவராக இருக்கிறார். எனவேதான், "அழகின் முழுமையே தாயே" என்று அவரை நாம் பாடிப் புகழ்கிறோம்.

5. ராகேல்-மரியா இருவரின் பிள்ளைகளுக்கும் ஒற்றுமைகள் உள்ளன. ராகேலின் மகனான யோசேப்பு இருபது வெள்ளிக் காசுகளுக்கு அடிமையாக விற்கப்பட்டார் (தொநூ 37:28). மரியாவின் மகனான இயேசுவோ முப்பது வெள்ளிக் காசுகளுக்கு காட்டிக்கொடுக்கப்பட்டார் (மத் 26:15). யோசேப்பு பின்னர் ஆளுநராகி தம் இனத்தாரைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றினார். இயேசுவோ தம் உயிரைக் கொடுத்து, தம் இனத்தாரை மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரையும் மீட்டார்.

6. இரு பெண்களுக்கும் **பெத்லகேம்** ஊருக்கும் தொடர்பு இருக்கிறது. ராகேல் இறந்து பெத்லகேம் அருகே புதைக்கப்பட்டார். மரியாவோ பெத்லகேம் ஊரில் தம் மகன் இயேசுவைப் பெற்றெடுத்தார்.

7. பன்னிரு குழந்தைகளுக்குத் தாயான ராகேல் இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களுக்கும் தாயானார். மரியாவோ புதிய இஸ்ரயேலின், பன்னிரு திருத்தூதரின் தாயாக மாறினார்.

8. நாடு கடத்தப்பட்ட இஸ்ரயேலரை நினைத்து அழும் தாயாக ராகேல் காட்டப்படுகிறார் (மத் 2:17). மரியாவோ தம் மகன் இயேசுவின் துயரங்களை நினைத்து வேதனையுறும் "வியாகுல அன்னையாக" இயேசுவின் சீடர்களால் பார்க்கப்படுகிறார்.

மேற்கண்ட பார்வையில், மரியாவைப் "புதிய ராகேல்" என்று அழைக்கலாம் அல்லவா!



அருள்பணி. குமார்ராஜா



# மனிதனின் உன்னத நிலை

குருவிடம் நான்கு பேர் வந்தார்கள். "முக்தி பெற விரும்புகிறோம் - எங்களுக்கு ஞானத்தைக் கற்றுத் தாருங்கள்" - என்றனர்.

"முப்பது நாள் கழித்து என்னிடம் வாருங்கள். அப்படி நீங்கள் மறுபடி என்னிடம் வரும்போது, ஒருவர் உயிருடன் இருக்கமாட்டீர்கள்" என்றார் குரு.

ஒரு மாதம் கழித்து நான்கு பேரும் குருவிடம் வந்தனர். "யாருமே சாகலையே!" - என்று வியப்புடன் கேட்டனர்.

"இந்த முப்பது நாளிலும் என்ன செய்தீர்கள்?" - என்று குரு கேட்க, "ஒரு மாதத்தில் செத்துப் போவோமே என்ற பயத்தில், செல்லுமிடம் எல்லாம் புண்ணியம் தேட, பாவத்தைவிட்டு விலகி, நிறைய தானதர்மம் செய்தோம்" என்றனர்.

"ஒரு மாதத்திற்குள் செத்து விடுவேன் என்றறிந்ததும், உங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டீர்கள். எப்போதுமே அதைப் பின்பற்றினால் விண்ணகத்தை அனுபவிக்க மாட்டீர்களா? இதுதான் ஞானம் - இதுதான் உபதேசம்" - என்றார் குரு.

✦ ✦ ✦

சாவு, எவ்விதக் கற்பனைகளுக்கும் எட்டாத விதத்தில் உள்ளது. இவ்வுலகத்தின் அவல நிலையில் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று. பேரின்ப முடிவிற்காக, இறைவன் மனிதரைப் படைத்துள்ளார்.

"உடலையும் ஆன்மாவையும் ஒருங்கிணைவாய்க் கொண்டவனே மனிதன். மனிதன் தன்னுடைய உடல் வாழ்வை வெறுக்கலாகாது. கடவுளால் தன் உடல் படைக்கப் பட்டதாலும், இறுதி நாளில் அது மீண்டும் உயிர் பெறப் போவதாலும், அதனை அவன் நல்லதாகவும், மதிப்பிற்குரியதாகவும் கருத வேண்டும்..... மனிதன் தன் உடல் வழியே, கடவுளை மகிமைப்படுத்த வேண்டும் (இன்றைய உலகில் திருச்சபை - எண் : 14).

இவ்வுலக வாழ்வை முடித்த சிலர், தூய்மைப் படுத்துகின்றனர். சிலர் மூவருள் ஒருவருமான இறைவனை அவர் இருப்பதுபோலவே தெளிவாகக் கண்டு மாட்சிமையடைகின்றனர்.

ஒவ்வொரு மனிதனும் உடல், ஆன்மா, இதயம், மனச்சான்று, சிந்தனை, உளம் ஆகியவற்றுடன் விளங்குகின்றான்.

உண்மையில், மனிதன் இம்மண்ணுலகின் வரம்புகளுக்கு மட்டுமே உட்பட்டவன் அல்லன். மாறாக, வரலாற்றில் வாழும் அவன் காலத்திற்கு அப்பாற்பட்ட ஒரு முழுமையான அழைப்பைப் பெற்றவனாவான்.

நமது இந்த ஒரே வையக வாழ்வு, நிறைவுற்றபின், ஆண்டவரோடு, மணவாழ்வில் கலந்து ஆசி பெற்றவர்களோடு எண்ணப்படத் தகுதிபெற வேண்டும்.

மாட்சி நிறை கிறிஸ்துவோடு அரசாளுமுன்னே, "அவனவன் செய்த நன்மை தீமைகளுக்குத் தக்க பயனடையும்படி, கிறிஸ்துவின் நீதியிருக்கைமுன் வெளிக்காட்டப் படுவோம்" (2கொரி 5:10).

மனிதன் நம்புவதற்காக வாழ்கின்றான். இறைவனை அடைந்து பேரின்பம் கொள்ள முற்படுகிறான். இது, இவ்வுலகில் நடைபெறாது.

எனவே, அவன் எதிர்காலத்தை எதிர்நோக்கி வாழ்கிறான். மறுஉலக வாழ்விற்கு நாம் செல்ல வேண்டும். மரணம், அதற்கு ஒரு கதவுபோல் செயல்படுகிறது.

மரித்தோர் உயிர்ப்பிலே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றால், அது உறுதியாக நடைபெறும் என்று எப்படி நம்புவது? நம்பிக்கையின் அடிப்படை - கிறிஸ்துவின் உயிர்ப்பு. கிறிஸ்து உயிர்த்ததால், நாமும் உயிர்ப்போம் என்பது விசுவாச உண்மை. இந்த விசுவாசத்தினால் உயிர்ப்பு உண்டென்று அறிகிறோம்.

மறுவுலக வாழ்வு உண்டென்று நம்பினாலும், நம்பாவிட்டாலும் அவன் உயிர்ப்பது உண்மை. எல்லாருக்கும் உயிர்ப்பு உண்டெனில், நம்பிக்கை கொண்டவர்களுக்கும் கொள்ளாதவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

நம்பிக்கையின் இலக்கு உயிர்ப்பு அல்ல; மாறாக, இறைவனோடு இணைவதும், அதனால் ஏற்படும் பேரின்பமுமாகும்.

✦ ✦ ✦

மரணம் என்பது, மனிதனுடைய செயல்கள் எல்லாவற்றிற்கும் இடப்படும் முற்றுப்புள்ளி! ஏனெனில், மனிதன் இறந்தபின் அவனால் நல்ல காரியங்களைச் செய்ய முடியாது; தீய செயல்களையும் செய்ய முடியாது. மரணம் நம்பிக்கையை முழுமைக்கும், முடிவுக்கும், நிறைவுக்கம் கொண்டு செல்கிறது.

நம்பிக்கையற்றவர்கள், மரணத்தோடு எல்லாமே ஒரு முடிவுக்கு வந்து விட்டதாகச் சொல்வர். இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பும் கசப்பும் கொண்டவர்கள்தாம் அப்படிச் சொல்வர்.

உயிரைக் கொடுத்த இறைவன்தான் அதை எடுக்கின்றார். அவர்தாம் நம்மை உயிர்ப்பிக்கவும் செய்கின்றார். இது, இறைவனால் மட்டுமே ஆகக் கூடிய செயல். உயிர்த்த இயேசுவே நம்மையும் உயிர்த்தெழச் செய்வார். உயிர்த்த கிறிஸ்துவும், கிறிஸ்தவ நம்பிக்கையும், மறுவாழ்வும் இருபெரும் நிலைகளாகும்.

மறுவுலக வாழ்வு என்பது, உலக முடிவில் நிகழும் நிகழ்ச்சி அல்ல. அது, ஏற்கனவே இந்த உலகில் துவங்கிய நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

மறுவுலகில் இறைவனோடு ஒன்றித்து இன்பமுடன் வாழ வேண்டுமெனில், இந்தப் பூவுலகிலேயே இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வை வாழ்ந்தாக வேண்டும். இங்கு புண்ணிய நெறிக்கு முரணாக வாழ்ந்தால், மறுவாழ்வில் இறைப் பிரசன்னத்தை உணராது, துன்பத்திலேயே உழல வேண்டும்.

இவ்வுலக வாழ்வைச் சிறப்புற நாம் நடத்த வேண்டுமானால், மறுவுலக வாழ்வில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். மறுவாழ்வில் நாம் கொள்ளும் நம்பிக்கையே, இம்மண்ணுலக வாழ்க்கையைச் சீரமைக்கிறது. ஆக, நம்பிக்கை தான் இவ்வுலக, மறுவுலக வாழ்வினை இணைக்கிறது.

அப்படியானால், இவ்வுலக வாழ்வு, மறுவுலக வாழ்வை நோக்கியே அமைகின்றது. எனவே, மனிதனின் முயற்சிகள், மறுவுலக நோக்கிலேயே அமைய வேண்டும். மனிதனின் முடிவு அவனுடைய செயல்களுக்குரிய மதிப்பையும் பொருளையும் கொடுக்க வேண்டும்.

நாம் சமுதாயத்தில் வாழ்வதால், நம்முடைய முடிவும் சமுதாயத்துடன் இணைந்ததாக அமைய வேண்டும். தனித்து நின்று நம்முடைய முடிவை அடைய முடியாது. இவ்வுலக வாழ்வில், பிறர் மட்டில் நமக்குரிய கடமைகளை நிறைவேற்றியாக வேண்டும்.

பிறரை மதிப்பது, மனித மாண்புடன் அவர்களை ஏற்றுக் கொள்வது, அவர்களின் உரிமைகளை ஏற்று, அவர்களின் குறிக்கோளை அடைய வழி வகுப்பது, அவர்களின் வாழ்வில் அன்பும் மகிழ்ச்சியும் சமாதானமும் நிலவச் செய்வது இன்றியமையாதவையாகும்.

"உன்னைக் கேட்காமல் உன்னைப் படைத்த இறைவன், உன் துணையின்றி உன்னை வானகம் சேர்க்கமாட்டார்" - என்கிறார் புனித அகுஸ்தினார்.

நாம் முடிவில்லா வாழ்வு பெறுவது, இறைவனின் செயல் மட்டுமல்ல. நம் செயலும்கூட. மனிதன் படைக்கப் பட்டது இறைவனுக்காக. இறைவனுக்காகவே வாழ்ந்து, இறுதியில் அவர் திருவடி நிழலை அடைவதே மனிதனின் கதி - உன்னத நிலை.



கலாபன் வாஸ்



தங்கத் தேர் 7 கவிதைகள்

# நம் தாய்

தங்க தேரினிலே எங்க ராணி வராங்க.
பட்டு உடுத்தி பவளம்மா நம்மளை பார்க்க வராங்க!
சீரோடும் சிறப்போடும் அக்களிப்பா வராங்க!
ஊரறிய உலகறிய நமக்கு உதவி செய்ய வராங்க!

சங்கடங்கள் தீர்த்து வைக்க சந்தோஷமாய் வராங்க!
தன்மகனோடு சிங்கார மேடையிலே ஆசி வழங்க வராங்க!
பசியோடு இருப்போரின் பசி போக்க வராங்க!
கண்ணீரோடு தவிப்போரின் கண்ணீர் போக்க வராங்க!

கஷ்டத்தை சொல்லும்போது காது கொடுத்து கேட்க வராங்க!
சாதி மத பேதம் இல்லாமல் நம்மைச் சந்திக்க வராங்க!
பிரிந்து வாழும் உறவுகளைச் சேர்த்து வைக்க வராங்க!
நோயினால் வாடுவோர்க்கு சுகம் அளிக்க வராங்க!

எலிசபெத்தை சந்தித்த தாய்,
குழந்தை பாக்கியம் கொடுக்க வராங்க!
கானாவூர் திருமணம் சென்ற தாய்
இன்று திருமண வரம் கொடுக்க வராங்க!
இருள் சூழ்ந்த நம் வீட்டில் ஒளியேற்ற வராங்க!
நூற்றாண்டைச் சிறப்பிக்கத் தங்கத் தேரில் வராங்க!

இஞ்ஞாசி ஜெயசீலி



# பனிமய சாட்சியங்கள்



*பனிமய சாட்சியம் : 81*



## திண்டுக்கல், ஜான் கில்பர்ட் சரிதா

தங்கத் தேரைப் பார்வையிட்டு, பனிமய அன்னையிடம் மன்றாட வந்த பெருந்திரளான திருப்பயணிகளில் ஒருவரான திண்டுக்கல்லைச் சேர்ந்த திரு. ஜான் கில்பர்ட் தமது மனைவி திருமதி சரிதாவுடன் பங்குத் தந்தையைச் சந்தித்து 1 கிராம் தங்க நாணயம் ஒன்றைக் காணி;க்கையாக வழங்கி பின்வரும் சாட்சியத்தைப் பகிர்ந்துகொண்டார்.

உடல் நலம் குன்றிய நிலையில் இருந்த திரு. ஜான் கில்பர்ட் பனிமயத் தாயிடம் மன்றாடி நலம் பெற்றுக்கொண்;டதாக சாட்சியம் சொன்னார். மேலும், "பணி மாற்றம் கோரி அன்னையிடம் மன்றாடினேன். பணி மாற்றம் பெற்றுக்கொண்டேன்" என்றும் நன்றி சொன்னார். தொடர்ந்து, 10ஆம் வகுப்பு படிக்கும் மகள் சாதனா ஜோஸ் நல்ல மதிப்பெண் பெறவும், கட்டிக்கொண்டிருக்கும் வீடு நன்கு கட்டி முடிக்கவும் அன்னையிடம் தொடர்;ந்து மன்றாடுவதாகச் சொன்னார். அவரது மரியன்னை பற்று பாராட்டுக்குரியது. மரியே வாழ்க!

*பனிமய சாட்சியம் : 82*

## குவைத்தில் வேலை வாய்ப்பு



தூத்துக்குடியில் பணியாற்றும் சகோதரி ஒருவர் கடந்த மாதம் பங்குத் தந்தையைச் சந்தி;க்க வந்தார். இந்த சகோதரியின் அண்ணன் 27 வயது மெக்கானிக்கல் எஞ்சினியரிங் பட்டதாரி கடந்த 7 ஆண்டுகளாக வேலையின்றி இருந்தார். அவரது மூத்த அண்ணன் கடந்த மே மாதம் பனிமய அன்னைப் பேராலயம் வந்து தமது தம்பி;க்காக அன்னையிடம் பரிந்து மன்றாடினார். அந்த மாதமே குவைத் நாட்டிலிருந்து படித்த படிப்புக்கேற்ற, நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைக்கான நேர்காணல் அழைப்பு வந்தது. அன்னையின் ஆசியால் நேர் காணலில் வெற்றி பெற்று, தற்சமயம் குவைத்தில் வேலை செய்து வருகின்றார். இந்த அற்புதச் செய்தியைப் பகிர்ந்து கொண்ட தங்கை அண்ணனுக்காகப் பனிமய அன்னையிடம் நன்றிக் காணிக்கை செலுத்திவிட்டுச் சென்றார்.



# தங்கத் தேர் 2023 மைல் கற்கள் – 7



57. **தங்கத் தேர் வரவு-செலவு அறிக்கை.** 05.10.2023 வியாழன் அன்று நடைபெற்ற பனிமய அன்னைப் பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் 15ஆம்; கூட்டத்தில் தங்கத் தேர்ப் பெருவிழாவின் வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தங்கத்தேர் நன்கொடை வரவு | ரூ. | 1, 74, 04, 509 |
| 2. | பெருவிழா வரவு | ரூ. | 1, 57, 84, 205 |
| | மொத்த வரவு | ரூ. | 3, 31, 88, 714 |
| 1. | தங்கத்தேர் செலவுகள் | ரூ. | 2, 55, 51, 560 |
| 2. | பெருவிழா செலவுகள் | ரூ. | 55, 11, 701 |
| 3. | கூட்டுத் திருமண செலவுகள் | ரூ. | 45, 94, 592 |
| 4. | புதிய தங்கத்தேர்ப்பறை கட்ட | ரூ. | 85, 21, 000 |
| | மொத்த செலவு | ரூ. | 4, 41, 78, 853 |
| | பற்று | ரூ. | 1, 09, 90, 139 |

ஒரு கோடியே, பத்து இலட்ச ரூபாய் பற்றாக்குறை என்று வாசிக்கப்பட்டாலும், கடந்த ஓராண்டாகப் பேராலயத்திற்கு வந்த இதர வரவுகளிலிருந்து, இந்தப் பற்றாக்குறை சரிசெய்யப்பட்டுவிட்டது என்று பங்குத் தந்தையால் அறிவிக்கப்பட்டது.

58. **தேர்ப் பறைக்குத் "தேர் மாறன்" பெயர் சூட்டுதல்.** அதே பொதுக்குழுக் கூட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தேர்ப்பறைக்கு "தேர் மாறன் தங்கத் தேர்ப் பறை" (தொன் கபிரியேல் டிக்குருஸ் வாஸ் 1753-1808) எனப் பெயர் சூட்ட ஒப்புதல் தரப்பட்டது. மேலும், "தேர் மாறன் தேர்ப் பறை : பனிமயத் தாயின் மகிமைக்காக விசுவாசிகளின் காணிக்கையால் எழுப்பப்பட்டது. அர்ச்சித்து, திறந்து வைத்தவர் அருள்முனைவர் குமார்ராஜா, அதிபர் ரூ பங்குத் தந்தை 14.10.2023, பங்கு மேய்ப்புப் பணிக்குழு 2020-2023" என்று கல்வெட்டில் பொறிக்கலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

59. **புதிய தேர்ப் பறையை ஆசிர்வதித்து, திறந்து வைத்தல்.** *14.10.2023* சனி மாலை *05.00* மணிக்குப் பங்கு மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்கள், தண்டல்மார்கள் மற்றும் பங்கு மக்களின் முன்னிலையில் புதிய தேர்ப்பறை பேராலய அதிபர் அருள்பணி. குமார்ராஜா அவர்களால் ஆசிர்வதிக்கப்பட்டு, திறந்துவைக்கப்பட்டது.

60. **தங்கத் தேர் ஆசிகளுக்காக முழு இரவு தொடர் செபமாலை.** கடந்த ஆண்டு முழு இரவு செபமாலை முடிந்த மறுநாள்தான் தங்கத் தேர் பறையிலிருந்து பேராலய வளாகம் கொண்டுவரப்பட்டது. அதனை நினைவுகூரும் வகையில் தங்கத் தேர்ப் பெருவிழா ஆசிகளுக்காக நன்றி கூறும் வகையில் *14.10.2023* சனி இரவு *10.00* முதல் மறுநாள் அதிகாலை *05.00* மணித் திருப்பலி வரையில் முழு இரவு தொடர் செபமாலை நடைபெற்றது. பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரின் முன்னெடுப்பில் நடத்தப்பட்ட இத்தொடர் செபமாலையில், தூத்துக்குடி நகரப் பங்குகளிலி ருந்து திரளான இறைமக்கள் பங்கேற்றனர்.

61. **தேரைப் புதிய பறைக்குக் கொண்டு சேர்த்தல்.** *15.10.2023* ஞாயிறு காலை *11.00* மணிக்குத் திரளான இறைமக்கள் கூடியிருக்க பங்குத் தந்தையின் செப வழிபாட்டுடன், தங்கத் தேர் இழுத்துச் செல்லப்பட்டு, புதிய தேர்ப்பறையில் சேர்க்கப்பட்டது. இவ்வாறு, ஓராண்டுத் தங்கத் தேர்ப் பணிகள் கடந்த ஆண்டு *09.10.2022* அன்று தொடங்கி, *15.10.2023* அன்று நிறைவுபெற்றது. இறைவனுக்கு நன்றி!

62. **தேர்ப் பொருள்களை ஏலமிடுதல்.** தங்கத் தேரைப் புதிய தேர்ப் பறையில் கொண்டு சேர்த்தபிறகு, பழைய தேர்ப் பறை மற்றும் அதிலிருந்த *50* வகையான பொருள்கள் பட்டியலிடப்பட்டு, வாட்ஸ் அப் வழியாக அனைவருக்கும் அனுப்பப்பட்டன. *29.10.2023* ஞாயிறு மாலை *04.30* மணிக்குப் பேராலய வளாகத்தில் பொது ஏலம் விடப்படும் என்று ஞாயிறு திருப்பலியில் அறிவிக்கப்பட்டது.

63. **தங்கத் தேர் கற்கள் மற்றும் இதர பொருள்கள் வினியோகம்.** தங்கத் தேரிலி ருந்து எடுக்கப்பட்ட ஐயாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கன் டயமண்ட் கற்கள் பேராலயப் பங்கு மக்கள் (*2000*), பங்கு மேய்ப்புப் பணிக்குழுவினர் (*140*), தங்கத் தேர்ப் பணிக்குழுவினர், தொழிலாளர்கள், *1250* நன்கொடையாளர்கள், அருள்தந்தையர், துறவியர் மற்றும் இறைமக்களுக்கு வழங்கப்பட்டன. அவை தவிர, தேரில் அலங்காரம் செய்ய வைக்கப்பட்டிருந்த *4500* முத்துகளும் இலவசமாக வினியோகிக்கப்பட்;டன என்பது இந்த ஆண்டின் ஒரு சிறப்பம்சம்.

# விவிலியப் போட்டி 105

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**திருப்பாடல் 51 - 55**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. ஆண்டவரே உமது பெயரின் ........................................ என்னைக் காப்பாற்றும்.
2. அவன் பேச்சு ........................................ மிருதுவானது.
3. உமக்கு எதிராக நான் ........................................ செய்வேன்.
4. ........................................ உம்மை மகிழ்விக்க முடியாது.
5. கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய ........................................ .
6. கடவுள் எனக்குத் ........................................ இருக்கின்றார்.
7. யாக்கோபின் இனத்தார் ........................................ .
8. ........................................ என் உள்ளத்தைப் பிளக்கின்றது.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.11.2023**

## விவிலியப் போட்டி 104

அக்டோபர் 2023 — விடைக்குறிப்புகள்

**திருப்பாடல் 45 - 50**

| | | |
|---|---|---|
| 1. | என்னைக் கூப்பிடுங்கள் | திபா 50:15 |
| 2. | மீட்பைக் கண்டடைவர் | திபா 50:23 |
| 3. | கைகொட்டுங்கள் | திபா 47:1 |
| 4. | மாண்புமிக்கவர் | திபா 48:1 |
| 5. | பேரழகுப் பெருமகன் நீர் | திபா 45:2 |
| 6. | நமக்கு அரண் | திபா 46:7 |
| 7. | நீதிபதியாய் வருகின்றார் | திபா 50:6 |
| 8. | அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார் | திபா 46:1 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், **குடும்ப அட்டை எண்** மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 189**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 115**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. இராயப்பர் அன்பியம் — **நேவிசம்மாள்**
2. சவேரியார் அன்பியம் — **அனுஷ்யா பீட்டர்**
3. செபஸ்தியார் அன்பியம் — **அஸ்கேவியஸ்**
4. சிந்தாத்திரை அன்பியம் — **சில்வியா அன்டனட் லூரட்ஸ்**

**பாராட்டுக்குரியவர்கள் : 111**

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா சார்லஸ்
6. லூக்காஸ் சகாயம்
7. சரோஜா
8. ரீனா மொறாயிஸ்
9. ஜெயா

**அன்னை தெரசா**
10. சுரேஷ் பிரேமா
11. ரெயிசா சுஜய்
12. ஜூலியட் ஜெயரூபி
13. சுகன் மோனிஷா
14. ரொவினா

**அன்னை வேளாங்கன்னி**
15. டென்சி
16. நான்சி
17. ஆரோன் ஷாரோன்
18. ராகுல் ராபர்ட்
19. ஜொசிட்டா
20. ஆரோன் கெவின் மோத்தா

**கிறிஸ்தரசர்**
21. செலஸ்கி கிளமென்ட்
22. ரெக்ஸ் கிரீன்வெல்
23. ஜெகன் பெமினா
24. லூரட் வசந்த்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
25. இருதயம்மாள்
26. ரொக்சினா

**திவ்யபாலன் அன்பியம்**
27. சகாயராணி தனராஜ்
28. பிரின்சி
29. சுமி ஜான்சன்

**பாத்திமா மாதா**
30. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
31. ஜெசிந்தா கான்ஸ்டன்
32. ராஜா ரீனா
33. ஜெனிட்டா மைக்கேல்
34. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**
35. பாப்டிஸ்டா
36. பிரைட்டன் ஜெரோஃபின்
37. இருதயம்மாள் கொன்சால்
38. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**
39. சகாயம்மாள் பெனடிக்ட்
40. கல்;யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
41. அந்தோனிசாமி
42. ட்ரைபேனா
43. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
44. வெனிட்டாள்
45. எலிஜா இம்மானுவேல்
46. ஜான் ஆல்ட்ரின்
47. சார்லட் பிராங்க்
48. ஜெயா அகஸ்டின்
49. ஜெசிமா கிளாரன்ஸ்
50. ரஜூலா அலாய்
51. ரஸ்கின் வசந்தா
52. சாந்தி ஆல்ட்ரின்
53. ஜோ ட்ரினிஷா
54. ஜூலியஸ் தல்மேதா

**குழந்தை தெரசா**
55. கிறிஸ்டி லிஸ்டன்
56. பெனி மொறாயிஸ்
57. பெர்லி பென்சன்
58. ஜீசஸ் ஜூலி

**குழந்தை இயேசு**
59. மோனிகா செபாஸ்டின்
60. அந்தோனியப்பா பிச்சம்மாள்
61. எமல்டா
62. பிரான்சிஸ் வாஸ்
63. ஆரோக்கியராஜ் ஹெலினா
64. சந்திரா

**மணல் மாதா**
65. கெயிட்டன் ஃபர்னான்டோ
66. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
67. ஜெனோ சேவியர்
68. ரம்யா
69. ரோஸ்லின் தாமஸ்
70. சாண்டினா
71. ஆலிவர் வி. ராயன்
72. சகாயராணி
73. ரஜூலா ஜான் போஸ்கோ
74. ஃபிலோ கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
75. ஜோசபின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
76. மெர்சி கோமஸ்
77. சுரேஷ் ஆனி
78. ஜூடு ரதி

**பவுலடியார்**
79. ராஜா ரோஸ்லின்
80. ஜான்சன் ஒஃபிலியா
81. லீமா ரோஸ்
82. ஹெலினா

**பரிபூரணமாதா**
83. சப்னா கின்ஸ்டன்

**பொம்பெயி மாதா**
84. மாத்யூ கர்டோசா
85. இ;ம்மாக்குலேட்
86. டிஃபானி அண்டோ
87. அந்தோனியம்மாள் மச்சாடோ
88. லூடா கான்ஸ்டன்
89. ஜான்சிராணி அமல்ராஜ்
90. தெரசா பிரகாஷ்
91. ஸ்நோ ஆல்பிரிக்

**இராயப்பர்**
92. டெய்சி

**சவேரியார்**
93. டெலிலா அமலன்
94. ரூபா மனுவேல்
95. அண்டன் சகாயம்
96. ஜென்சி ஜோர்னஸ்

**செபஸ்தியார்**
97. அந்தோனியம்மாள் டென்சிங்
98. ஜெசிலா சேவியர்
99. பிரவீணா

**சிந்தாத்திரை மாதா**
100. நேசம்
101. ஜூடி ஆரோக்கியராஜ்
102. ராஜி ஜஸ்டின்
103. செல்வி லாசர்

**சிறுமலர் அன்பியம்**
104. செலஸ்டின்
105. விஜி சகாயராஜ்
106. எல்சிட்டா ஆனந்த்

**சூசையப்பர்**
107. கிறிஸ் ரிஜோ
108. மோனிஷா காஸ்பின்
109. ரூபி கொர்னேலியுஸ்
110. ஹேமலதா

**திருச்சிலுவை**
111. சரோலின் கில்டன்
112. ரிமோனி டிவோட்டா

**வியாகுல மாதா**
113. கெலிண்டன்
114. லூர்து லினட்
115. ராஜா ஜரின்

## பரிசு பெறுபவர்கள் : 4

116. செங்கல்பட்டு — மார்கரட் மேரி
117. பாளையங்கோட்டை — அனிதா மேரி
118. திண்டுக்கல் — ரொசாலி
119. தூத்துக்குடி குருஸ்புரம் — டெல்பின்

## பாராட்டுக்குரியவர்கள் : 70

**ஆலந்தலை**
120. மரியம்மாள்
121. பொன்சேகா
122. சகாயராணி

**வீரபாண்டியன்பட்டணம்**
123. ரேச்சல் ராயன்

**ஆறுமுகனேரி**
124. தொம்மை அந்தோனி
125. ஜெயராணி

**ஏரல்**
126. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
127. ஹெலன் அன்னமணி

**சென்னை**
128. கமலஜோதி ஜெயசீலன்
129. ஒஃபிலியா தாமஸ்
130. நிகிலா

**பாளையங்கோட்டை**
131. பிரேமா குணசீலன்
132. சுவர்ணா
133. ரோசி
134. டெனிசா கிளாட்

**பேட்டை**
135. ஹெலனிட்டா

**கயத்தாறு**
136. அமல்ராஜ்

**பெரியகுளம்**
137. குழந்தை தெரஸ்

**கோயம்புத்தூர்**
138. லூக்காஸ்
139. ராஜேந்திரன் அருள்
140. ஆஷா தனசீலன்
141. சேவியர் பர்னாந்து

**பல்லடம்**
142. பிரான்சிஸ் ஆர்லன்

**திருச்சி**
143. மோனிட்டா கிறிஸ்டி
144. மேத்யூ விவேக்
145. டோனி
146. ஜான்சி ராணி

**சேலம்**
147. செல்வ நாயகி

**மதுரை**
148. சகோ. அப்போலி;ன்

**வடக்குத்து**
149. ஹென்றிதாஸ்

**பரமக்குடி**
150. சைமன் சாந்தி

__தூத்துக்குடி நகர பங்குகள்__

**திரு இதயங்களின் பேராலயம்**
151. ரமோலா கமிலஸ்
152. ரிமோல்டா
153. சுசீலன்
154. கிரேட்டா ராஜா
155. கரோலின்

**குருஸ்புரம்**
156. ஆசீர்வாதம்
157. பௌவுசி ஜோ மைக்கேல்
158. ஜான்சி மெண்டிஸ்
159. பிளசி செல்வராஜ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
160. சுகிர்தா
161. ஷெரினா
162. சகாயம்
163. செல்வி ஆன்சலி

**யூதா ததேயு கோவில்**
164. ரோஸ் சேவியர்
165. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
166. பிரான்சிஸ் ஜூலியட்

**காந்திநகர்**
167. சாந்தினி
168. ரியாலினோ
169. அன்சிட்டா
170. அனிதா
171. பேபி வால்டர்
172. பின்டன் சோஃபியா
173. ஜொஷி

**லூர்தம்மாள்புரம்**
174. மெர்சி
175. லைசி ஜோசப்

**சார்லஸ் கோவில்**
176. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
177. செக்கரியா சாமுவேல்
178. ஜொசி குணபாலன்
179. வினிஃபிரட் பிரின்ஸ்டன்

**இஞ்ஞாசியார்புரம்**
180. அற்புத செல்வி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
181. விர்ஜின்
182. தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
183. சோஃபியா விஜய்
184. இருதயம்மாள் கபிரியேல்
185. சுஜாதா மகேஷ்
186. மென்சிலா லொயோலா

**திரேஸ்புரம்**
187. கோல்வின் ஜேசுராஜ்

**பாத்திமா நகர்**
188. மேரி ஹேம்லின்

**கோவளம்**
189. சரோபின் ஜோசப்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 176**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 189**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 52)

## நவம்பர் - 2023

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி சைமன் ஆல்டஸ் | 74485 18127 |
| களப் பணியாளர் | : | சகோதரர் ஆல்ட்ரின் | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

495. **தேர்ப் பறைக்குத் "தேர் மாறன்" பெயர் சூட்டுதல்.** பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் 15ஆவது **பொதுக்குழுக் கூட்டம்** 05.10.2023 அன்று நடைபெற்றது. புதிதாகக் கட்டப்பட்டுள்ள தேர்ப்பறைக்கு "தேர் மாறன் தங்கத் தேர்ப் பறை" (தொன் கபிரியேல் டிக்குருஸ் வாஸ் 1753-1808) எனப் பெயர் சூட்ட ஒப்புதல் தரப்பட்டது.

496. பங்குத் தந்தை அருள்பணி. குமார்ராஜாவின் 35ஆவது குருத்துவ அருள்பொழிவு நாளை முன்னிட்டு 09.10.2023 ஞாயிறு காலை 11.00 முதல் 01.00 வரை "மரியன்னையின் மைந்தர்கள்" என்னும் **மரியியல் பாசறை** அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. தூத்துக்குடி நகரிலுள்ள கன்னியர் இல்லங்களிலிருந்து 33 அருள்சகோதரிகள் கலந்துகொண்டனர்.

497. பங்குத் தந்தை அருள்பணி. குமார்ராஜாவின் 35ஆவது குருத்துவ அருள்பொழிவு நாளை முன்னிட்டு 08.10.2023 ஞாயிறு காலை 11.00 முதல் 01.00 வரை "மரியன்னையின் மைந்தர்கள்" என்னும் **மரியியல் பாசறை** அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. தூத்துக்குடி நகரிலுள்ள கன்னியர் இல்லங்களிலிருந்து 33 அருள்சகோதரிகள் கலந்துகொண்டனர்.

498. பங்குத் தந்தை அருள்பணி. குமார்ராஜாவின் 35ஆவது குருத்துவ அருள்பொழிவு நாளை முன்னிட்டு 10.10.2023 செவ்வாய் மாலை 06.30 முதல் 07.45 வரை மறைமாவட்ட முதன்மைக் குரு பேரருள்திரு. பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் **"35 Insights to enhance our Life and Ministry"** என்னும் மேய்ப்புப் பணிப் பாசறை அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. தூத்துக்குடி நகரிலிருந்து 27 அருள்பணியாளர்கள் கலந்துகொண்டனர். அருள்பணி. குமார்ராஜாவின் புதிய நூலான "மரியின் மைந்தர்கள்" நூல் வெளியிடப்பட்டது.

499. தெற்கு எம்பரர் தெருவிலுள்ள **பாத்திமா அன்னை கெபியில்** 12.10.2023 வியாழன் இரவு அருளிக்க ஆசீரும், 13.10.2023 வெள்ளி காலையில் பாத்திமா அன்னையின் திருவிழாத் திருப்பலியும் நடைபெற்றது. அன்றிரவு 08.00 மணிக்கு சப்பரப் பவனி நடைபெற்றது.

500. **புதிய தேர்ப் பறையை ஆசிர்வதித்து, திறந்து வைத்தல்.** 14.10.2023 சனி மாலை 05.00 மணிக்குப் பங்கு மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்கள், தண்டல்மார்கள் மற்றும் பங்கு மக்களின் முன்னிலையில் புதிய தேர்ப்பறை பேராலய அதிபர் அருள்பணி. குமார்ராஜா அவர்களால் ஆசிர்வதிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.

501. **தங்கத் தேர் ஆசிகளுக்காக முழு இரவு தொடர் செபமாலை.** தங்கத் தேர்ப் பெருவிழா ஆசிகளுக்காக நன்றி கூறும் வகையில் 14.10.2023 சனி இரவு 10.00 முதல் மறுநாள் அதிகாலை 05.00 மணித் திருப்பலி வரையில் முழு இரவு தொடர் செபமாலை நடைபெற்றது. பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரின் முன்னெடுப்பில் நடத்தப்பட்ட இத்தொடர் செபமாலையில், தூத்துக்குடி நகரப் பங்குகளிலிருந்து திரளான இறைமக்கள் பங்கேற்றனர்.

502. **தேரைப் புதிய பறைக்குக் கொண்டு சேர்த்தல்.** 15.10.2023 ஞாயிறு காலை 11.00 மணிக்குத் திரளான இறைமக்கள் கூடியிருக்க பங்குத் தந்தையின் செப வழிபாட்டுடன், தங்கத் தேர் இழுத்துச் செல்லப்பட்டு, புதிய தேர்ப்பறையில் சேர்க்கப்பட்டது. இவ்வாறு, ஓராண்டுத் தங்கத் தேர்ப் பணிகள் கடந்த ஆண்டு 09.10.2022 அன்று தொடங்கி, 15.10.2023 அன்று நிறைவுபெற்றது. இறைவனுக்கு நன்றி!

503. 21.10.2023 சனி அன்று **பனிமய நோன்பு வழிபாடு (37)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை "குருமாணவர்களின் ஆசிகளுக்காக" நடைபெற்றது. அனைத்துக் குருமாணவர்களுக்காகவும், சிறப்பாக சென்னை, பூவிருந்தவல்லி தூய நெஞ்சக் குருத்துவக் கல்லூரியில் பயிலும் குருமாணவர்களுக்காகவும் வேண்டுதல்கள் ஏறெடுக்கப்பட்டன.

504. **தேர்ப் பொருள்களை ஏலமிடுதல்.** தங்கத் தேரைப் புதிய தேர்ப் பறையில் கொண்டு சேர்த்தபிறகு, பழைய தேர்ப் பறை மற்றும் அதிலிருந்த 50 வகையான பொருள்கள் பட்டியலிடப்பட்டு, வாட்ஸ் அப் வழியாக அனைவருக்கும் அனுப்பப்பட்டன. 29.10.2023 ஞாயிறு மாலை 04.30 மணிக்குப் பேராலய வளாகத்தில் பொது ஏலம் விடப்படும் என்று ஞாயிறு திருப்பலியில் அறிவிக்கப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 138. | ஜூவானா | நிஷாந்து – மிஸ்டிக்கா | 08.10.2023 | இரக்கத்தின் மாதா |



### *ஆசி கூறுகின்றோம்*

### 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 125. | பிச்சையா – ஆனி | சவேரியார் | 25.10.2023 |



### *இறைவனைப் போற்றுகிறோம்*

### 3. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 40 | ஜான்சன் | ஜெயராய் | 09.10.2023 | சூசையப்பர் |



### *செபிக்கின்றோம்*

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 175. | ஜோசப் | ராணி | 28.09.2023 | வியாகுல மாதா |
| 176. | டென்சன் | பெர்லி | 30.09.2023 | குழந்தை தெரசா |
| 177. | ஜான்சன் | ஜெயராய் | 09.10.2023 | சூசையப்பர் |
| 178. | லில்லி மஸ்கரனாஸ் | ரொசாரி பர்னான்டஸ் | 22.10.2023 | காவல் தூதர் |

# நடைபெறவிருப்பவை

★ **இறந்த நம்பிக்கையாளர் நினைவு நாள்:** 02.11.2023 வியாழன் அன்று நம் பேராலயத்தில் காலை 05.00, 05.45, 06.30, 07.15 ஆகிய நேரங்களில் திருப்பலி நடைபெறும். **மாலையில் திருப்பலி நடைபெறாது.**

★ 03.11.2023 **தலைவெள்ளி** அன்று காலையும், மாலையும் பங்கின் முதியோர் மற்றும் நோயாளர்களுக்கு நற்கருணை வழங்கப்படும்.

★ 04.11.2023 முதற் சனி அன்று மாலையில் **சப்பரப் பவனியும், நவநாள் வழிபாடும்** நடைபெறும். இவை நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ 18.11.2023 மூன்றாம் சனி அன்று **பனிமய நோன்பு வழிபாடு (37)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை **"வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போருக்காக"** நடைபெறும்.

★ 26.11.2023 ஞாயிறு கிறிஸ்தரசர் பெருவிழாவை முன்னிட்டு பகல் முழுவதும் **தொடர் நற்கருணை ஆராதனை** நடைபெறும்.

★ புனித செசிலியாவின் திருவிழாவை முன்னிட்டு பாடகர் குழுவினர், திரைக் குழுவினருக்கான **ஒன்றுகூடல்** 26.11.2023 ஞாயிறு மாலை 06.45 மணிக்கு நேவிஸ் அரங்கத்தில் நடைபெறும்.


## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 150 | 07.11.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | உத்தரிக்கும் நிலை |
| 151 | 14.11.2023 | செவ்வாய்; | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இறுதித் தீர்ப்பு, விண்ணகம், நரகம் |
| 152 | 21.11.2023 | செவ்வாய்; | அருள்பணி. மார்ட்டின்குமார் | இறந்தோர்க்காக மன்றாடுவோம் |
| 153 | 28.11.2023 | செவ்வாய்; | அருள்பணி. ஜெரால்டு ரவி | நமது இறப்புக்காக ஆயத்தம் செய்வோம் |
| 154 | 05.12.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | திருவருகைக் கால ஆயத்தம் |

மாதம் ஒரு மாதா படம் : 42




A. இம்மானுவேல்
லயன்ஸ் டவுண்

"ஆண்டவரை உயிர்த்தெழச் செய்த கடவுள்
தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார்." (1 கொரி 6:14).

# நினைவு அஞ்சலி



**P. அந்தோணி பிச்சை பர்னாந்து**

தோற்றம் : 17.01.1937
மறைவு : 28.05.2016
வயது : 79

**P. சரோஜா பர்னாந்து**

தோற்றம் : 31.12.1947
மறைவு : 30.08.2023
வயது : 76

# ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## P. சூசையம்மாள் பர்னாந்து



தோற்றம் 07.03.1953
வயது : 70
மறைவு 15.11.2017

பாசத்தோடு பெற்றெடுத்து பணிவையும் பாசத்தையும் எமக்குணர்த்தி
உழைப்பால் எமை உயர்த்தியவர்களே நீங்கள் இறைவனில்
என்றென்றும் மகிழ்ந்திட வேண்டுகிறோம்.

மிகவும் மதுரமான இயேசுவே!
வாழ்நாளெல்லாம் உமது அன்பில் மகிழ்ந்து வாழ்ந்த சூசையம்மாள் பர்னாந்து
அவர்களின் ஆன்மா விண்ணரசில் நித்திய பேரின்பத்தில்
மகிழ்ந்து வாழ அருள்புரியும்.

*பிரிவால் வருந்தும்*

கணவர் : J. பீட்டர் பர்னாந்து
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

1, சவேரியா பிச்சை லேன், மாதா கோவில் காம்பவுண்ட், தூத்துக்குடி.

# நினைவு அஞ்சலி

பாட்டனார் – அப்பத்தா




சொர்ணசாமி விக்டோரியா
மரிய அமிர்தம்மாள் கர்வாலி

விண்ணில்
15.08.1955

மண்ணில்
12.01.1899
விண்ணில்
19.05.1973

தாத்தா – அம்மம்மா



மனுவேல் செல்வம் காகு
எலிசபெத் விக்டோரியா

மண்ணில்
13.04.1908
விண்ணில்
21.04.1973

மண்ணில்
31.03.1922
விண்ணில்
27.11.1997

அன்பு அப்பா



மண்ணில்
22.11.1926

விண்ணில்
24.09.2000

சவேரியார்அடிமை திருஞானசுந்தரம் விக்டோரியா

உங்கள் திருநிழலில் பேரின்பம் காணும்
சொர்ணராஜன் விக்டோரியா குடும்பத்தினர்

# நினைவு அஞ்சலி

"உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்."

(2தெச 1:3)

## 27ஆம் ஆண்டு

*மண்ணில்*
*14.04.1918*
*(ஆலந்தலை)*

*விண்ணில்*
*31.10.1996*
*(சென்னை)*

## 21ஆம் ஆண்டு

*மண்ணில்*
*24.03.1921*
*ஆலந்தலை*

*விண்ணில்*
*15.11.2002*
*(சென்னை)*



## திரு. அகஸ்டின் பர்னான்டோ

## திருமதி. சிறியபுஷ்பம் டிரோஸ்

*நன்றியுடன் நினைவுகூரும்*

அன்பு மக்கள்

திருமிகு. பொன்சேகா - ரொசாரி தங்கராஜ் (விண்ணில்)

அருள்சகோ. ரொசாரியோ FMM

திருமிகு. கமலஜோதி - ஜெயசீலன்

திருமிகு. கஸ்மீர் ராஜா - ராஜகுமாரி

திருமிகு. பிரேமா - குணசீலன்

அருள்பணி. குமார்ராஜா

SHINY Ph : 98421 31493